பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 11 சனிக்கிழமை 27.11.2021 கதிர் 250

## யாழ். பல்கலைக்கழகத்தில் மேலும் இரு பேராசிரியர்கள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மேலும் இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகத் தரமுயர்த்துவதற்கு பல்கலைக்கழகப் பேரவை ஒப்புதல் அளித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக பேரவையின் மாதாந்த கூட்டம் இன்று

2

## மண்டபம் முகாமில் ஈழத்தமிழர்கள் பிரபாகரனின் பிறந்தநாள் நிகழ்வு

(ந.லோகதயாளன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 67ஆவது பிறந்தநாளை மண்டபம் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள மக்கள் கேக் வெட்டி கொண்டாடினர்.

பிரபாகரனின் பிறந்தநாளை மண்டபம் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள ஈழத் தமிழ் மக்கள் ஆண்டு தோறும் கொண்டாடுவது வழக்கம். அதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் பிரபாகரனின் 67ஆவது பிறந்த நாளை மண்டபம் முகாமில் நேற்று கேக் வெட்டி கொண்டாடினர்.

மண்டபம் இலங்கைத் தமிழர் முகாம் வளாகத்தில் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன்

2

## சீருடையினரின் அடாவடிக்கு மத்தியிலும் திருவிலில் உணர்வெழுச்சியுடன் அஞ்சலி




(கலையமுதன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.27

வல்வெட்டித்துறை தீருவில் திடலில் இன்று மாலை 6.05 மணியளவில் பாதுகாப்புத் தரப்பினரின் நெருக்கடிக்கு மத்தியிலும் மாவீரர் நாள் நிகழ்வுகள் திட்டமிட்டபடி இடம்பெற்றன.

பருத்தித்துறை நீதிமன்றில் தடை உத்தரவை பெறுவதற்கு வல்வெட்டித்துறை பொலிஸார்

2

### இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்களின்

# கெடுபிடிகளைத் தாண்டி மாவீரர்களுக்கு அஞ்சலி!




**தமிழீழத் தனியரசு அமைப்பதற்காக - தனி நாடு உருவாகுவதற்காகச் சமராடி வித்தாகிப்போன மாவீரர்களை - காவிய நாயகர்களை நினைவுகூரும் மாவீரர் நாள் இன்று தாயக தேசமான வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார், புலனாய்வாளர்கள் ஆகியோரின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் கடைப் பிடிக்கப்பட்டது.**

2

## முல்லையில் நினைவேந்தல் பீற்றர் இளஞ்செழியன் கைது

மாவீரர்களை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வுகள் முல்லைத்தீவு கடற்கரையில் நடைபெற்றுள்ளன.

நினைவேந்தலுக்கான ஏற்பாட்டில் பீற்றர் இளஞ்செழியனும் மனைவியும் ஈடுபட்டிருந்தபோது அரசியல் செயற்பாட்டாளர் இளஞ்செழியன் பொலிஸாரால் பிடித்துச் செல்லப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் கடற்கரையில் கூடிய பெருமளவானோர் மாவீரர் நினைவேந்தலை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவில் மாவீரர் நினைவேந்தலை முன்னெடுக்க முயன்றார் என்ற குற்றச்சாட்டில் பீற்றர் இளஞ்செழியன் பொலிஸாரால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

## பன்றிக்கு வைத்த மின்சாரத்தில் அகப்பட்டு குடும்பஸ்தர் மரணம்!

(ந.லோகதயாளன்)

வவுனியா மாவட்டத்தில் பன்றிக்கு வைத்த மின்சாரத்தில் அகப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

வவுனியா, மதுரங்குளத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் துரைச்சாமி சுப்பிரமணியம் (வயது 69) என்னும் வயோதிபரே இவ்வாறு உயிரிழந்த வராவார்.

தனது தோட்டத்தில் நாட்டிய மரவள்ளிக்கு பன்றி அதிகமாக வருவதால் ஏற்படும்

2

## சாட்டியிலும் அஞ்சலி




(ந.லோகதயாளன்)

சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்திற்குள் உறவுகளை அனுமதிக்காது படையினரால் தடைகள் ஏற்படுத்தப்பட்டபோதும் உறவுகள் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினர்.

2

## முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளர் மீது இராணுவம் மூர்க்கத்தனமான தாக்குதல்!


முள்ளிவாய்க்கால் பகுதிக்கு இன்று ஊடகவியலாளர் ஒருவர் மீது நான்கு இராணுவத்தினர் இணைந்து மூர்க்கத்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் மீதே மூர்க்கத்தனமாக

2




## வடக்குக் கடலில் கரை ஒதுங்கும் மனித உடல்கள் யாருடையவை?

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,நவ.27

வல்வெட்டித்துறை, மணல்காடு பகுதிகளில் கரை ஒதுங்கும் மனித உடலங்கள் யாருடையவை என்பதில் சந்தேகம் நிலவுகின்றது.

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை மற்றும் மணல்காடுப் பகுதிகளில் இன்று காலை இரு உடல்கள் கரை ஒதுங்கியுள்ளன.

அவை இரண்டும் ஆண்களுடையவை. ஆனால் அடையாளம் காண முடியாத நிலைமையில் உள்ளன.

இதன் காரணமாக

2

## மாணவி கர்ப்பம்; குடும்பஸ்தர் கைது

(வவுனியா நிருபர்)

வவுனியா ஓமந்தை குஞ்சுக்குளம் பகுதியைச் சேர்ந்த 12 வயதான பாடசாலை மாணவியொருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 32 வயதான குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா, ஓமந்தை - குஞ்சுக்குளம் பகுதியைச் சேர்ந்த குறித்த மாணவிக்கு இன்று திடீர் சுகவீனம் ஏற்பட்ட நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதன்போது குறித்த மாணவி நான்கு மாதங்கள்

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் எழுதப்பட்ட 'மாவீரர் நாள் நவம்பர் - 27'

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கொடிகாமம் - பருத்தித்துறை வீதியில் 'மாவீரர் நாள் நவம்பர் - 27' என எழுதப்பட்டுள்ளது.

மாவீரர் வாரம் ஆரம்பம் முதல் வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் ஆகியோரின் சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கைகளும், கண்காணிப்புக்களும் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், இன்று அதிகாலை வேளை குறித்த வீதியில் மாவீரர் நாளை நினைவுகூரும் முகமாக 'மாவீரர் நாள் நவம்பர் - 27' என எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சு.கவின் ஆதரவு தேவையில்லை!

## அமைச்சர் பிரசன்ன விளாசல்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவு எமக்குத் தேவையில்லை. ஆட்சியை முன்னெடுப்பதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமும் அவசியமில்லை.

இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இந்த அரசின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கைகளிலேயே தங்கியுள்ளது என அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டிருந்த அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இப்படியெல்லாம் பிரச்சினை வரும் எனத் தெரிந்துதான், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்களுக்கு வேட்புமனு வழங்க வேண்டாம் என நான் அன்றே வலியுறுத்தினேன். தற்போது அரசில் இருக்க முடியாவிட்டால் வெளியேறட்டும். அதனால் எமக்குப் பாதிப்பு இல்லை.

அரசுக்குள் இருந்துகொண்டு - சிறப்புரிமைகளை அனுபவித்தபடி விமர்சனங்களை முன்வைப்பதைவிடவும், வெளியேறுவதே நல்லது - என்றார்.

# தனிவழிப் பயணத்துக்கு மைத்திரி அணி தயார்



மாகாண சபைத் தேர்தலில் தனித்து களமிறங்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகி வருகின்றது என அக்கட்சி வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான மோதல் உக்கிரமடைந்துள்ளது.

அதேபோல் சுதந்திரக் கட்சிக்கு அரச கூட்டுக்குள் பாகுபாடு காட்டப்படுகின்றது எனவும், நிதி ஒதுக்கீடுகள் இடம்பெறுவதில்லை எனவும் அக்கட்சி உறுப்பினர்கள் உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தனிவழி செல்வதற்கு சுதந்திரக் கட்சி தயாராகி வருகின்றது என தெரியவருகின்றது.

## வடக்குக் கடலில் கரை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை இந்திய மீனவர்கள் யாரும் காணாமல் போனார்களா என விசாரிக்கப்படுகின்றது.

இதேநேரம் கரை ஒதுங்கிய உடல்கள் ஒன்றில் கையில் ஆலய நூலும் இரண்டாவது உடலில் கையில் ஏற்பட்ட காயத்திற்கு அண்மையில் தையல் போட்ட அடையாளமும் காணப்படுகின்றன.

மற்றொரு சடலம் கரை ஒதுங்கியதாக பிந்திக் கிடைத்த செய்தி ஒன்று தெரிவித்தது.

## மாணவி கர்ப்பம்; .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கர்ப்பம் தரித்துள்ள விடயம் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

மாணவியிடம்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தமையுடன் அவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மாதர்பனிக்கர்குளம் பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 32 வயது குடும்பஸ்தரைக் கைதுசெய்தனர்.

சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் குறித்த மாணவி வவுனியா வைத்தியசாலையில் தொடர்ந்து சேர்க்கப்பட்டுள்ளார்.

## முள்ளிவாய்க்காலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அவர் கையில் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மாவீரர் தினச் செய்திகளைச் சேகரிப்பதற்காக முள்ளிவாய்க்கால் சென்ற அவர், முள்ளிவாய்க்கால் பெயர்ப்பலகையைப் படம் எடுத்தபோது, ஏன் படம் எடுக்கின்றாய்? எனக் கேட்டே நான்கு இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவிக்கையில்,

முள்ளிவாய்க்கால் பகுதியிலுள்ள இராணுவ வீதித் தடையை, குறித்த ஊடகவியலாளர் காணொலி பதிவு செய்துள்ளார்.

இதையடுத்து, இராணுவத்தினர் அவரிடம் விசாரணைகளை நடத்த முற்பட்ட சந்தர்ப்பத்தில், குறித்த ஊடகவியலாளர் அங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சித்தார்.

இதன்போது குறித்த ஊடகவியலாளர் தடுமாறி கீழே வீழ்ந்துள்ளார்.

இதையடுத்து, இராணுவத்தினர் சம்பவம் தொடர்பில் முள்ளிவாய்க்கால் பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், குறித்த நபரிடம் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

ஊடகவியலாளர் எனக் கூறப்படும் நபரிடம், ஊடகவியலாளர் என்பதை உறுதிப்படுத்தும் அரசால் விநியோகிக்கப்படும் ஊடகவியலாளர் அடையாள அட்டை இருக்கவில்லை.

எனினும், சம்பவத்தையடுத்து, இராணுவத்தினர் தன் மீது தாக்குதல் நடத்தியதாக ஊடகவியலாளர் கூறிய நிலையில், பொலிஸார் அவரை வைத்திய பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றனர்.

இராணுவ முகாம் அல்லது இராணுவ வீதித் தடைகளை படம் பிடிக்க இராணுவத்திடம் முன்னதாகவே அனுமதி பெற வேண்டும் என்ற போதிலும், அந்த விதிமுறைகளை குறித்த நபர் பின்பற்றவில்லை.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளிவாய்க்கால் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் - என்றார்.

## சாட்டியிலும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று மாலை 6.07 ற்கு துயிலும் இல்லத்தில் சுடரேற்ற படையினர், பொலிஸார் தடைகளை ஏற்படுத்தியபோதும் அரசியல் பிரமுகர்கள் , உறவுகள் நீண்ட முயற்சியின் பின்பு துயிலும் இல்லம் முன்பாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

## கெடுபிடிகளைத் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தவகையில், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், இராணுவத்தினரின் இறுக்கமான கெடுபிடிகளுக்கு மத்தியில் இறுதிப் போர் முடிவுற்ற நந்திக் கடலில் மாவீரர்கள் நினைவாக இன்று காலை மலர்தூவி அஞ்சலி செலுத்தினார்.

எங்கள் பெருமைமிகு வரலாற்றின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல் ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும் செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினேன் என்று அவர் தெரிவித்தார்.

இதன்பின்னர் மாவீரர்களின் ஆத்ம சாந்திவேண்டி, முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இன்று வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதல் மாவீரன் லெப். சங்கரின் வல்வெட்டித்துறை இல்லத்தில் இன்று மாலை கப்டன் பண்டிதரின் தாயார் ஈகைச் சுடரேற்றி மாவீரர் நாள் நினைவேந்தலை மேற்கொண்டார்.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டார்.

இவ்வாறு வடக்கு, கிழக்கின் பல இடங்களில் மாவீரர் நினைவேந்தல்கள் இன்று கடைப்பிடிக்கப்பட்டன.

## பன்றிக்கு வைத்த .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இழப்பைத் தடுக்கும் நோக்கில் வேலியில் மின்சார இணைப்பை ஏற்படுத்தியுள்ளார்.

இவ்வாறு ஏற்படுத்திய மின் இணைப்பிலேயே அவர் தவறுதலாக அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சீருடையினரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதி வரை முயன்று பலனளிக்காத நிலையில், நினைவு அஞ்சலி செலுத்துவதற்கு வந்தோரை அச்சுறுத்தும் பாணியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டனர்.

பல்வேறு அச்சுறுத்தல் தடைகளையும் தாண்டி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே திடலுக்குள் இராணுவத்தால் உள்நுழைய அனுமதிக்கப்பட்ட உறவுகள் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்தமையுடன் பொதுச் சுடர் ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

உறவுகளை இழந்தவர்கள், மதத் தலைவர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பலரும் இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இதனைக் கண்டு அஞ்சலி செய்ய தீருவில் திடலுக்கு வெளியே ஒன்று கூடி தீபங்களை ஏற்றி பொதுமக்கள் அஞ்சலித்த பொழுது மிகக் கேவலமான முறையில் சிவில் உடையில் இருந்த புலனாய்வுப் பிரிவினர் தீபங்களை தட்டி விட்டதுடன் அநாகரிகமான முறையில் செயற்பட்டனர்.

இதேவேளை இந்த அஞ்சலி நிகழ்வில் பங்குபற்றியவர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் நடந்து கொண்டமையுடன் ஊடகவியலாளர்களுடன் முரண்பட்டனர்.

## மண்டபம் முகாமில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற படம் அச்சிட்ட மெகா சைஸ் கேக் வெட்டி குழந்தைகளுக்கு வழங்கிக் கொண்டாடினர். அப்போது பிரபாகரன் வாழ்க, அவரின் புகழ் வளர்க என்று அவர்கள் முழக்கங்கள் எழுப்பினர்.

அமைதியான முறையில் நடைபெற்ற இந்தப் பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தை மத்திய மாநில உளவுத்துறை அதிகாரிகள் கண்காணித்தனர்.

## யாழ். பல்கலைக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவியுயர்வுக்காக விண்ணப்பித்த சிரேஷ்ட விரிவுரையாளர்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைய மதிப்பீடுகளையும், நேர்முகத்தேர்வு - தெரிவுக் குழுவின் சிபார்சுகளையும் பரிசீலனை செய்த பேரவை மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும், நரம்பியல் சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி அஜினி அரசலிங்கம் மருத்துவப் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி கணபதி கஜபதி விலங்கியலில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்படுவதற்குப் ஒப்புதல் அளித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

நமது பார்வை
உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# சீரழியும் நாடு

இலங்கையில் யுத்தம் ஆக்ரோஷமாக நடைபெற்ற காலத்தில் ஒரு விடயம் கூறப்பட்டது.

நாட்டில் நிலையான அமைதியும், நீடித்த சமாதானமும், புரிந்துணர்வுடன் கூடிய நல்லிணக்கமும், இனப் பிரச்சினைக்கான தீர்வும் கிட்டுவதற்கு யுத்தம்தான் முட்டுக்கட்டை, அதை முடிவுக்கு கொண்டு வந்தால் எல்லாம் சுமுகமாகி விடும் என்று கொழும்பு அதிகார வர்க்கம் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தது.

தமிழர் தரப்பில் விடுதலைப் புலிகள் முன்னெடுத்த விடுதலைப் போராட்டத்தை 'பயங்கரவாதமாக' சித்திரித்த கொழும்பு, அமைதிக்கும் சமாதானத்துக்கும் நீடித்த தீர்வுக்கும் அதுவே முட்டுக்கட்டை என்று முரசறைந்தது. சர்வதேசமும் கூட இந்தப் பித்தலாட்டக் கருத்தை நம்பியது.

புலிகளின் 'பயங்கரவாதம்' முறியடிக்கப்பட்டால் நாடு அமைதி, சமாதானத்தில் மூழ்கி விடும். எங்கும் புரிந்துணர்வும், இன சௌஜன்யமும், நல்லிணக்கமும் நிலவும் என்றெல்லாம் முழுக் கதை உரைக்கப்பட்டது.

புலிகள் மீதான யுத்தத்தை சந்திரிகா அரசு 'சமாதானத்துக்கான யுத்தம்' என்று விநோதப் பெயரிட்டு அழைத்தமையும் இந்த 'சுத்துமாத்துக்' கருத்துக்குள் அடங்கும்.

சிறுபான்மைத் தரப்பான தமிழர் வசம் இருக்கும் எந்த வலுவையும் – வலிமையையும் – விட்டு வைப்பது, முழு இலங்கைத் தீவையும் பௌத்த, சிங்களவர்களுக்கு மட்டும் உரித்தான தாயகம் என்று அடையாளப்படுத்தும் தமது ஆக்கிரமிப்பு முயற்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்று பௌத்த, சிங்கள ஆட்சிப் பீடங்கள் கருதின.

அதனால் தமிழர்களின் பலமான ஆயுத வலிமையைத் தோற்கடித்தால்தான், தான் விரும்பிய எந்த அரைகுறைத் திட்டத்தையும் தீர்வு என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் திணித்து விடலாம் என்று கணக்குப் போட்டது கொழும்பு.

சர்வதேசத்தைத் தவறாக வழிப்படுத்தி, அதன் மூலம் கிடைத்த உலகளாவிய ஒத்துழைப்பைக் கொண்டு, புலிகள் அமைப்பை நிரந்தரமாக அழித்தது பௌத்த, சிங்கள ஆட்சிப் பீடம்.

புலிகள் அமைப்பு முடிந்துவிட்டது. கொழும்பின் வார்த்தைகளில் கூறுவதானால் 'பயங்கரவாதம்' அழித்தொழிக்கப்பட்டு விட்டது. கனலும் துப்பாக்கிகளும், முழங்கும் பீரங்கிகளும், வெடிக்கும் குண்டுகளும் அடங்கி ஓய்ந்துவிட்டன. யுத்த அமைதி நிலவுகின்றது.

ஆனால் சமாதானம் வந்துவிட்டதா? புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்பட்டு விட்டனவா? அமைதித் தீர்வு கிட்டிவிட்டதா?

எதுவும் நடக்கவில்லை. தமிழர் தரப்பின் வலிமையாக இருந்த ஆயுதப்பலத்தை கொழும்புடன் சர்வதேசமும் இணைந்து அழித்துவிட்டமையால் தமிழினம் இன்று சூறையாடப்படுகின்றது. தமிழர் தாயகம் கபளீகரம் பண்ணப்படுகின்றது. தமிழர் தேசம் ஆக்கிரமிக்கப்பட்டு அடிமைப்படுத்தப்படுகின்றது. பௌத்த, சிங்களத்தின் கலாதி கால அடக்குமுறை புதிய உத்வேகத்துடன் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

யுத்தம் முடிந்து 12 வருடங்கள் கடந்து விட்டன. குறைந்த பட்சம் நாட்டின் நிலைமையாவது மேம்பட்டதா? இல்லவே இல்லை.

யுத்தத்தின் முடிவின் பின்னரும் கடந்த 12 வருடங்களிலும் ஒவ்வொரு வருடத்திலும் நாட்டின் நிலைமை முந்திய வருடத்திலும் விட பெரிதும் மோசமாகிச் செல்வதைக் காண்கின்றோம்.

பௌத்த, சிங்களப் பேரின வெறியோடு விடயங்களை அணுகும் மேலாண்மைத் திமிரில் இருந்து இலங்கை ஆட்சிப் பீடம் இறங்காத வரையில், இப்படி இலங்கைத் தீவின் நிலைமை படுமோசமாகிச் செல்வதைத் தடுக்கவே இயலாது. இதுதான் யதார்த்தப் புறவுண்மை.



# கிராமிய கொவிட் கட்டுப்பாட்டுக்கு அதிக அவதானம் செலுத்துங்கள்!

## ஜனாதிபதி ஆலோசனை

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியை ஏற்றி மூன்று மாதங்கள் கடந்த 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், நடமாடும் சேவை மூலம் மூன்றாவது டோஸ் தடுப்பூசியை ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு, சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் கூடிய கொரோனா தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கினார்.

வைத்தியசாலைகளுக்கு கிளினிக் செல்லும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், அந்த சிகிச்சையகத்தில் வைத்தே இந்த பூஸ்டர் தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரண்டாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தி ஒரு மாதம் கடந்த தொற்றா நோய்களுக்கு இலக்காகியுள்ள 20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், மூன்றாவது டோஸ் தடுப்பூசியைச் செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன்பிரகாரம், புற்று நோயாளிகள், புற்று நோய்க்கு சிகிச்சை பெறுவோர், உறுப்பு மாற்று சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டோர், இரத்தமாற்று செய்யப்பட்ட நோயாளிகள், தொற்றா நோய் காரணமாக நோய் எதிர்ப்புச் சக்தி குறைந்த அனைவருக்கும், விசேட வைத்திய பரிந்துரைக்கமைய மூன்றாவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது.

உரிய சிகிச்சையகங்கள் அல்லது சனிக்கிழமை நாள்களிலும், இத்தரப்பினருக்கான மூன்றாவது தடுப்பூசி ஏற்றல் பணிகள் முன்னெடுக்கப்படும் என, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

கொவிட் நோயாளிகளுக்காக, பிரித்தானியா உள்ளிட்ட சில நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மோல்னுபிரவீர் வில்லை பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை நாட்டுக்குக் கொண்டு வந்தது போன்றே, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக இந்த வில்லைகளையும் நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

கொரோனாத் தொற்றுப் பரவல் தொடர்பில் கிராமிய மக்கள் கொண்டுள்ள கவனக் குறைவு தொடர்பிலும் இதன்போது பேசப்பட்டதுடன், கிராமிய ரீதியில் பரவும் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தல் மற்றும் அது தொடர்பில் அவர்களுக்குத் தெளிவுபடுத்தல்களை முன்னெடுப்பது தொடர்பிலான வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

# மோல்னுபிரவீர் வில்லையை பெற்றுக்கொடுப்பது குறித்து அவதானம் செலுத்துக – ஜனாதிபதி

மோல்னுபிரவீர் வில்லையை பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் கூடிய கொரோனா தடுப்புச் செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி இந்த ஆலோசனையை வழங்கினார்.

கொரோனா நோயாளிகளுக்காக, பிரித்தானியா உள்ளிட்ட சில நாடுகளில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மோல்னுபிரவீர் வில்லை பெற்றுக்கொடுப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பூசிகளை நாட்டுக்குக் கொண்டுவந்தது போன்றே, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக இந்த வில்லைகளையும் நாட்டுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு, இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவுக்கு, ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

# எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் இளம் குடும்பப்பெண் உயிரிழப்பு!

பொலன்னறுவை வெலிகந்த பகுதியிலுள்ள வீடொன்றில் எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 19 வயதுடைய திருமணமான பெண் ஒருவர் கடந்த வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் வெலிகந்த, சந்துன்பிட்டிய பகுதியைச் சேர்ந்த ஆயிஷா குமுதுனி என அடையாளம் காணப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 13ஆம் திகதி குறித்த வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதன்போது வீட்டில் வேறு எவரும் இல்லாத நிலையில் அயலவர்கள் அவரை உடனடியாக வெலிகந்த வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இது தொடர்பில் பிரதேசவாசிகள் வெலிகந்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அண்மையில் கொண்டு வரப்பட்ட எரிவாயு சிலிண்டர் வெடித்ததில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக உயிரிழந்தவரின் தந்தை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக உரிய அதிகாரிகள் சிறப்பு விசாரணை நடத்த வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். இதேவேளை, இந்த மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 5 எரிவாயு சிலிண்டர்கள் வெடித்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# லிபிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட கடாபியின் மகனுக்கு தடை விதிப்பு!



லிபிய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட, அந்த நாட்டின் முன்னாள் ஜனாதிபதி கடாபியின் மகன் சயீப் அல் இஸ்லாமுக்கு தேர்தல் ஆணையம் தடை விதித்துள்ளது.

கடாபியின் ஆட்சிக் காலத்தின் போது அரசுக்கு எதிராக கடந்த 2011ஆம் ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வன்முறையை ஏவிவிட்ட குற்றத்துக்காக திரிபோலி நீதிமன்றம் சயீபுக்கு மரண தண்டனை விதித்துள்ளது.

மேலும், அவர் மனித உரிமை மீறலில் ஈடுபட்டார் என சர்வதேச நீதிமன்றத்திலும் வழக்கு உள்ளது. இந்தச் சூழலில், அவர் தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப் பட்டுள்ளது.

எனினும், இந்தத் தடையை எதிர்த்து சயீப் அல் இஸ்லாம் மேல்முறையீடு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு 60 வேட்புமனுக்கள் தாக்கலாகியுள்ளன. பெண் உரிமைப் போராளியான லீலாபென் கலிபா (வயது 46) மட்டும்தான் பெண் வேட்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று வலிமை வாய்ந்த தலைவராக அங்கு கருதப்படுகிற கல்பா ஹப்தாரின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அவர் அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குகளை எதிர்கொள்வதால் அவரது வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. லிபியா இராணுவ சட்டத்தரணிகள்தான் இவர்கள் இருவரது வேட்புமனுக்களையும் நிராகரிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையத்தை கேட்டுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

லிபியாவில் ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கு முதல் கட்ட தேர்தல் அடுத்த மாதம் 24ஆம் திகதியும், இரண்டாம் கட்ட தேர்தல் ஜனவரி 24ஆம் திகதியும் நடைபெற உள்ளது. அங்கு தற்போது முகமது அல் மெனிபி என்பவர் ஜனாதிபதியாக உள்ளார்.

லிபியாவின் ஜனாதிபதியாக 1969 ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு வரை பதவி வகித்தவர் முஅம்மர் அல் கடாபி. 40 ஆண்டுகளாக நடைபெற்று வந்த கடாபியின் ஆட்சி, கடந்த 2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 20ஆம் திகதி முடிவுக்கு வந்தது. அவர் கிளர்ச்சிப் படையினரால் உயிருடன் பிடிக்கப்பட்டு, உடனடியாக சுட்டுக்கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து கிளர்ச்சியாளர்களால் சயீப் அல் இஸ்லாம் கைது செய்யப்பட்டார்.

பின்னர் தொடங்கிய உள்நாட்டுப் போரில் கடாபி கொல்லப்பட்டார். சயீபை கைது செய்து வைத்திருந்த அபுபக்கர் அல் சித்திக் என்ற அமைப்பினர் அவரை 2017ஆம் ஆண்டு விடுவித்தனர்.

# எட்டு நாடுகளுக்கான பயணங்களை தடை செய்தது அமெரிக்கா


கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றின் அதிகம் வீரியம் கொண்ட ஓமிக்ரான் மாறுபாட்டின் பரவலைத் தடுக்கும் உலகளாவிய முயற்சியின் ஒரு பகுதியாக, தென்னாபிரிக்கா உள்ளிட்ட பிற எட்டு நாடுகளில் இருந்து அமெரிக்கா அல்லாத குடிமக்களுக்கான பயணத்தை அமெரிக்கா கட்டுப்படுத்தும். தென்னாபிரிக்காவைத் தவிர, போட்ஸ்வானா, சிம்பாப்வே, நமீபியா, லெசோதோ, ஈஸ்வதினி, மொசாம்பிக் மற்றும் மலாவி ஆகியவை புதிய கட்டுப்பாடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. திங்கட்கிழமை முதல் இந்த கட்டுப்பாடு அமுலுக்கு வருகின்றது.

இந்த தடை எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது குறித்து எவ்வித தகவலும் இல்லை. சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கான தடுப்பூசி தேவைகளுக்கு ஆதரவாக தென்னாபிரிக்கா உட்பட 30க்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து பார்வையாளர்கள் மீதான தொற்று நோய் பயணக் கட்டுப்பாடுகளை நிர்வாகம் நீக்கிய மூன்று வாரங்களுக்குள் இந்த முடிவு வந்துள்ளது.

கனடா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் அனைத்தும் வெள்ளிக்கிழமை தென்னாபிரிக்காவிலிருந்து வரும் பயணிகளுக்கு கட்டுப்பாடுகளை அறிவித்தன.

பெல்ஜிய அதிகாரிகள், ஓமிக்ரான் மாறுபாட்டின் பல தொற்றுகள் ஏற்கனவே அங்கு அடையாளம் காணப்பட்டன என அறிவித்தனர்.

பயணக் கட்டுப்பாடுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்று (வெள்ளிக்கிழமை) ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ‘அறிவியல் மற்றும் எனது மருத்துவக் குழுவின் அறிவுரைகளின்படி, தீர்மானங்கள் எடுக்கப்படும். நாங் கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று நான் முடிவு செய்துள்ளேன். இது ஒரு பெரிய கவலை. இதுதவிர, மாறுபாடு பற்றி எங்களுக்கு அதிகம் தெரியாது. இது வேகமாக பரவுகிறது’ என கூறினார்.



# தடுப்பூசி போட்டுக் கொள்ள தயங்கும் ஆஸ்திரியர்கள்!



ஐரோப்பிய நாடான ஆஸ்திரியாவில், பெரும்பாலான மக்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாமல் இருக்கின்றனர் என தெரிய வந்துள்ளது.

அண்மைய தரவுகள் படி, ஆஸ்திரியாவில் 66 சதவீதமான மக்கள் தான் தடுப்பூசி போட்டுக்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரிய மக்களில் கணிசமானவர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்ள மறுக்கின்ற நிலையில், எதிர்வரும் ஆண்டு பெப்ரவரி மாதம் 1ஆம் திகதி அவர்களுக்கு காலக்கெடு விதிக்கப் பட்டுள்ளது. அந்த கால எல்லைக்குள் தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்களுக்கு 3,600 யூரோக்கள் அபராதம் விதிக்கப் படுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. அபராதம் செலுத்தாதவர்கள் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண் டும். ஒட்டுமொத்த மக்களையும் தடுப்பூசி போட்டுக்கொள்ள கட்டாயப் படுத்தும் முதல் ஐரோப் பிய நாடு ஆஸ்திரியா தான். தற்போது ஆஸ்திரியாவில் கொவிட் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், கடந்த நவம்பர் 22ஆம் திகதி அரசாங் கம் மீண்டும் ஒருமுறை முழு முடக்கநிலையை அறிவித்தது. இது குறைந்தது பத்து நாள்களுக்கு நீடிக்கும்.

இது ஆஸ்திரியாவின் 90 லட்சம் மக்களை வேலைக்கு, அத்தியாவசிய மானாப் பிங் மற்றும் உடற்பயிற் சிக்காக மட்டும் விட்டு விட்டு வீட்டில் தங்கியிருக்க நிர்ப்பந்திக்கிறது.

# தீக்கிரையாகும் சாலமன் தீவுகளின் தலைநகர்

சாலமன் தீவுகளின் தலைநகரான ஹோனியாராவில் நேற்று கிளர்ச்சியாளர்களால் கட்டடங்களுக்கு தீவைக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த பிரதேசத்தில் அடர்ந்த கரும் புகை மூட்டம் அதிகமாக காணப்படுவதாக அந்த நாட்டு ஊடகங்கள் அறிவித்துள்ளன.

அரசாங்கத்தின் ஊரடங்கு உத்தரவையும் மீறி, அந்த நாட்டு பிரதமரை பதவி நீக்கம் செய்யக் கோரி ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் தலைநகர் ஹொனியாரா வீதிகளில் இறங்கியுள்ளனர் எனவும் அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நீட் விலக்கு மசோதாவை குடியரசுத்தலைவரின் அனுமதிக்கு அனுப்புவது குறித்து ஆளுநரிடம் முதல்வர் வலியுறுத்தல்




தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவியை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் நேரில் சந்தித்து, நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

நீட் தேர்வில் இருந்து தமிழகத்திற்கு விலக்கு அளிக்கும் சட்ட மசோதா, தமிழக சட்டப்பேரவையில் கடந்த செப்ரெம்பர்13ஆம்திகதிஒருமனதாகநிறைவேற்றப்பட்டது. நிறை வேற்றப்பட்ட அந்த மசோதா, அன்றைய ஆளுநரான பன்வாரிலால் புரோகித்துக்கு அன்றைய தினமே அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், அது தொடர்பாக அன்றைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித் எந்த முடிவும் அப்போது எடுக்கவில்லை.

இதன் பின்னர் ஒக்ரோபர் மாதத்தில் தமிழக ஆளுநராக ஆர்.என்.ரவி பொறுப்பேற்ற பின்னர், 'அந்த சட்ட மசோதாவிற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தர வேண்டும்' எனக்கோரி, முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று அவரிடம் கடந்த ஒக்ரோபர் 13 ஆம் திகதி கோரிக்கை வைத்தார். இருப்பினும் தற்போதுவரை அந்த சட்ட மசோதா குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படாமல் உள்ளதையடுத்து இன்று மீண்டுமொருமுறை நேரில் ஆளுநரை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்தித்துள்ளார்.

இன்றைய சந்திப்பில், நீட் தேர்வினால் மருத்துவ சேர்க்கையில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பின் தனித்தன்மையை கருத்தில்கொண்டு, நீட் விலக்கு மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு உடனே அனுப்பிவைக்க வேண்டும் என தமிழக முதல்வர் வலியுறுத்தியுள்ளார் என கூறப்படுகிறது.

# சென்னை மீண்டும் வெள்ளக்காடானது அதி கனமழை நாளை வரை நீடிக்கும்

எப்போதும் இல்லாத வகையில் இந்த முறை வடகிழக்கு பருவமழை தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பெய்து வருகிறது. சென்னை மட்டுமன்றி தென் மாவட்டங்கள், டெல்டா மாவட்டங்கள், வட மாவட்டங்கள், மேற்கு மாவட்டங்கள் என அனைத்துப் பகுதிகளிலுமே கனமழை தொடர்ந்து நீடித்து வருகிறது.

கடந்த 13, 14 ஆகிய திகதிகளில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக சென்னை மாநகரில் மிக கன மழை பெய்தது. 20 சென்ரி மீற்றருக்கு அதிகமாக சென்னையில் பெய்த மழையால் மாநகரம் வெள்ளக்காடாக மாறியது. இந்த நிலையில் கடந்த வாரமும் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் மீண்டும் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவானது. அப்போது சென்னையில் கனமழை பெய்யும் என வானிலை மையம் தெரிவித்து இருந் தது.

இந்த நிலையில் காற்றழுத்தம் காரணமாக சென்னையில் நேற்று காலையில் இருந்தே மழை பெய்தது. பிற்பகலுக்கு பிறகு கனமழை கொட்டித் தீர்த்தது. இந்த மழை இரவு முழுவதும் தொடர்ந்து, இன்று காலையிலும் மழை நீடித்தது. இதன் காரணமாக சென்னையில் வெள்ளம் வடிந்திருந்த பகுதிகளில் மழை நீர் மீண்டும் தேங்கியுள்ளது.

விடிய விடிய பெய்த கனமழை காரணமாக சென்னை மாநகரம் மீண்டும் வெள்ளக்காடாகக் காட்சி அளிக்கிறது. சென்னையில் உள்ள முக்கிய சாலைகள் மற்றும் 300க்கும் மேற்பட்ட தெருக்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன.

தி.நகர், கே.கே.நகர், மாம்பலம், மேற்கு மாம்பலம், கோயம்பேடு, வடபழனி, விருகம்பாக்கம், சாலிகிராமம், நுங்கம்பாக்கம், சூளைமேடு, புரசைவாக்கம், புளியந்தோப்பு, எழும்பூர், வேளச்சேரி, மேடவாக்கம், அண்ணாநகர், முகப்பேர், வேப்பேரி உள்ளிட்ட மாநகரின் அனைத்து இடங்களிலும்,



புறநகர் பகுதிகளிலும் கொட்டித் தீர்த்த மழையால் அனைத்துப் பகுதிகளிலும் மழை நீர் அதிகளவில் தேங்கியுள்ளது. புளியந்தோப்பு, ஓட்டேரி, மாதவரம் வடபெரும் பாக்கம், விளங்காடுபாக்கம் உள்ளிட்ட இடங்களிலும், வேளச்சேரி, மடிப்பாக்கம் போன்ற தாழ்வான பகுதிகளிலும் மழை நீர் அதிகளவில் வீடுகளைசூழ்ந்துள்ளது. சிலநாள்கள் இடைவெளிக்கு பிறகு தொடர்ந்து பெய்த மழையால் சென்னை மக்கள் மீண்டும் கடுமையான அவதிக்குள்ளாகியுள்ளனர். தண்ணீரை வெளியேற்றும் பணிகளில் மாநகராட்சி ஊழியர்களும் அதிகாரிகளும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். இதற்கிடையே இந்த அதி கனமழை நாளை வரை நீடிக்கும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் இன்றும், நாளையும் மழை தொடர வாய்ப்புள்ளது. சென்னையில் வெள்ளம் தேங்கும் பகுதிகளில் மீண்டும் மழை வெள்ளம் தேங்காத அளவுக்கு சென்னை மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கான ஆய்வுப் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் வடிகால்களை முறையாக பராமரிக்கவும் அதிகாரிகளுக்கு சென்னை மாநகராட்சிகமிஷ்னர் ககன்தீப்சிங் பேடி அறிவுரை வழங்கியுள்ளார்.

## கேரளாவிலும் கனமழை நீடிப்பு 12 மாவட்டங்களுக்கு எச்சரிக்கை

கேரளாவிலும் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. மாநிலம் முழுவதும் தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் பம்பை நதி உள்பட அனைத்து ஆறுகளிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பெரும்பாலான அணைகளும் நிரம்பி உள்ளன.

இந்த நிலையில் திருவனந்தபுரம் உள்பட அனைத்து மாவட்டங்களிலும் நேற்றும் மழை பெய்தது. இன்று திருவனந்தபுரம், கொல்லம், மலப்புரம் உள்பட 12 மாவட்டங்களில் மிக பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்று பெரும்பாலான மாவட்டங்களில் பலத்த காற்றுடன் மழை பெய்கின்றது என்றும் இதனால் தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும் நாளை காசர்கோடு தவிர மாநிலத்தில் உள்ள பிற 13 மாவட்டங்களிலும் மிக பலத்த மழை பெய்யும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து மாவட்ட நிர்வாகங்கள், வருவாய்த்துறை மற்றும் மீட்புத்துறையினர் 24 மணி நேரமும் மீட்பு நடவடிக்கையில் ஈடுபடும் வகையில் தயார் நிலையில் இருக்குமாறு மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.





## ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் டிசெம்பரில் இந்தியாவுக்கு பயணம்

ரஷ்ய நாட்டின் அதிபர் விளாடிமிர் புடின் வருகிற டிசெம்பர் 6ஆம்திகதி இந்தியாவுக்குச் செல்லவிருக்கிறார். அப்போது இந்தியப் பிரதமர் மோடியுடன் பல்வேறு விடயங்கள் குறித்து அவர் பேச்சுநடத்தவிருக்கிறார். இருநாட்டுத் தலைவர்களின் பேச்சில் இருநாட்டு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து முக்கியம்சங்கள் இடம்பெறவுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது உலகளவில் நடைபெறும் முக்கியமான பிரச்சினைகள் குறித்து ஆலோசனை நடத்துவது முக்கியம்சமாக இடம்பெறவிருக்கிறது. ஜி-20, பிரிக்ஸ், ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பு ஆகியவற்றில் இணைந்து பங்காற்றுவது குறித்தும் பேச்சில் கவனம் செலுத்தப்படுமென இந்தியாவுக்கான ரஷ்ய தூதரகம் தெரிவித்துள்ளது.

## சுயசக்தி அபிமானி திட்டத்துக்கான விருதில்

# தேசிய ரீதியில் முதலாம் இடம் மட்டக்களப்பு மாவட்டம் சாதனை



சமூகசேவைகள் திணைக்களத்தால் வருடாந்தம் மாற்றுத்திறனாளிகளுக்காக நடாத்தப்பட்ட சுயசக்தி அபிமானி திட்டத்திற்கான விருது வழங்கும் விழா 2019 / 2020 கடந்த வியாழக்கிழமை பத்தரமுல்லையில் இடம்பெற்றுள்ளது.

சமூக சேவை திணைக்களத்தினால் மாற்றுத்திறனாளிகளை மையப்படுத்தி தேசிய ரீதியில் 25 மாவட்டங்களுக்கிடையில் வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் சுயசக்தி அபிமானி விருது விழாவின் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்கான விருது வழங்கும் விழா இடம்பெற்ற போது மட்டக்களப்பு மாவட்டமானது 2019 ஆண்டிற்கான விருதிற்காக தெரிவாகியிருந்த நிலையில் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தினை பெற்றுக்கொண்டுள்ளது.

அதேவேளை 2020 ஆண்டிற்கான விருதிற்காகவும் தெரிவாகியிருந்த நிலையில் தேசிய ரீதியில் முதலாம் இடத்தினையும், மூன்றாம் இடத்தினையும் மட்டக்களப்பு மாவட்டம் பெற்று சாதனை படைத்துள்ளது.

11 பிரிவுகளின் கீழ் இடம்பெற்ற போட்டியில் 50 பேரிற்கு உட்பட்ட விசேட தேவையுடைய நபர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் விசேட தேவையுடைய சிறந்த சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள் எனும் இரண்டு வகையான பிரிவுகளில் மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் பங்குபற்றி அதனைத் தொடர்ந்து மாகாண மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் வெற்றியீட்டியதனைத் தொடர்ந்து தேசிய ரீதியில் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியதன் அடிப்படையிலேயே குறித்த தேசிய விருதுகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

# களுவாஞ்சிகுடி பகுதியில் அன்டிஜன் பரிசோதனை

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் 11 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 2 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டுள்ளதாக பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.இராஜேந்திரனின் வழிகாட்டலில் மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஒழுங்கமைப்பில் துறைநீலாவணை, பெரியகல்லாறு, கோட்டைக்கல்லாறு, ஒந்தாச்சிமடம், மகிழூர், குருமண்வெளி, எருவில், பட்டிருப்பு, களுவாஞ்சிகுடி, களு தாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையம், குருக்கள்மடம் ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதுவரை களுவாஞ்சிகுடி பிராந்தியத்தில் 9,785 பேருக்கு அன்டிஜன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதில் 2,936 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளங்காணப்பட்டுள்ளதுடன் அவர்களுள் 30பேர் உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புதையல் தோண்டிய 11 சந்தேகநபர்கள் கைது

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள வில்காமம் மலை பிரதேசத்தில் புதையல் தோண்டலில் ஈடுபட்ட சந்தேகநபர் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், புதையல் தோண்டலுக்காக சந்தேகநபர்கள் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளோம் எனத் திருக்கோவில் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள மலையில் கல்லுடைக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்ற நிலையில், சம்பவதினமான இரவு மலைக்கு அருகில் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஒரு குழுவினர் ஈடுபட்டுவருகின்றனர் எனப் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

குறித்த தகவலுக்கமைய அப்பகுதியை பொலிஸார் முற்றுகையிட்ட போது, அங்கு புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நேருபுரம் மற்றும் திருக்கோவிலைச் சேர்ந்த 11 பேர் கொண்ட குழுவினரை மடக்கிபிடித்து கைது செய்துள்ளனர்.

மேலும் அலவாங்கு, மண்வெட்டி மற்றும் புதையல் தோண்டுவதற்கான உபகரணங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வீதியின் நடுவில் நின்ற மின்கம்பங்களை ஓரமாக்கும் நடவழக்கை





கல்முனை மாநகர பெரியநீலாவணை பகுதியில் வீதியின் நடுவில் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து வந்த இலங்கை மின்சார சபையின் மின்கம்பங்களை அகற்றி ஓரமாக நடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அப்பிரதேச மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தர் இசட். ஏ. நௌஷாடிடம் முன்வைத்த கோரிக்கைக்கமைய இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தர் இசட். ஏ. நௌஷாட் இந்த விடயம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய பிரதம மின் பொறியியலாளர் எந்திரி ஏ.எம். ஹைக்கலிடம் இது தொடர்பில் கலந்துரையாடி இந்த மக்களின் தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க பெரிய விபத்துக்களில் இருந்து தடுத்து அவர் நடவடிக்கை எடுத்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது. நீண்டகாலமாக நிலவிவந்த இந்தப் பிரச்சினைக்கு தீர்வை வழங்கிய இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய பிரதம மின் பொறியியலாளர் எந்திரி ஏ.எம். ஹைக்கல், மின் அத்தியட்சகர் எந்திரி கௌசல்யன், மின் அத்தியட்சகர் எந்திரி நஜிமுதீன் ஆகியோருக்கும் இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

# கல்வியாறு சஞ்சிகை வெளியீட்டு விழா

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபையின் பெரியகல்லாறு பொதுநூலகம், வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு கல்வியாறு என்னும் சஞ்சிகையை வெளியிட்டுள்ளது .

அண்மையில் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற வெளியீட்டு விழாவின்போது மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை தவிசாளர் ஞா.யோகநாதன், மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.பிரகாஸ் ஆகியோருக்கு முதற் பிரதிகளை நூலகப் பொறுப்பாளர் திருமதி வாமதி சதாகரன் வழங்கி வைத்தார்.



வாசகர் வட்ட பொருளாளர் கணேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சி.பிரகாஸ், மண்முனைதென் எருவில் பிரதேச சபையின் தவிசாளர் கே.யோகநாதன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் சண்.கணேசநாதன் உட்பட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் தளவாய் பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏறாவூர் தளவாய் பகுதியில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் தளவாய் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் மணல் சுத்திகரிப்பு பண்ணையினுள் உள்ள நீர் வடிந்தோடும் இயற்கைத் தோணாவினுள் இருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டது.

குறித்த தனியார் காணியினுள் கூலித் தொழிலில் ஈடுபடும் செங்கலடி கித்துள் பகுதியைச் சேர்ந்த 07 பிள்ளைகளின் தந்தையான கந்தையா ஸ்ரீதர் என்பவரே இவ்வாறு தோணாவினுள் மூழ்கி உயிரிழந்துள்ளார். நேற்றிரவு சுமார் 10.30 மணியளவில் சடலம் பிரதேச இளைஞர்களால் மீட்கப்பட்டது.

குறித்த இடத்திற்கு வருகை தந்திருந்த ஏறாவூர் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம். நஸீர் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு Kalaikkathir



# ஆஸ்திரேலிய அணியின் டெஸ்ட் கப்டனாக வேகப்பந்துவீச்சாளர் பட் கம்மின்ஸ் நியமனம்




இங்கிலாந்து கிரிக்கெட் அணி ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட ஆஷ் டெஸ்ட் தொடரில் பங்கேற்கவுள்ளது.

ஆஸ்திரேலியா – இங்கிலாந்து அணிகளுக்கிடையேயான முதலாவது டெஸ்ட் வரும் டிசெம்பர் 8 ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகிறது. ஆஷ் தொடரின் முதல் இரு டெஸ்ட் போட்டிக்கான 15 பேர் கொண்ட ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அப்பட்டியலில் விக்கெட் கீப்பரான டிம் பெய்ன் கப்டனாக தொடர்வார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பெண்ணொருவருக்கு தவறான தகவல்களை அனுப்பிய விவகாரம் தொடர்பான சர்ச்சையில் சிக்கிய காரணத்துக்காக அணித்தலைவர் பதவியிலிருந்து விலகுகிறேன் என டிம் பெய்ன் அறிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, ஆஷ் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் புதிய கப்டனாக பட் கம்மின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதன்மூலம் ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் 47 ஆவது கப்டனாக அவர் பொறுப்பேற்றுள்ளார். 65 வருடங்களுக்குப் பின் ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் கப்டனாக இருக்கும் வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையை பட் கம்மின்ஸ் பெற்றுள்ளார். ஆஷ் தொடரில் ஸ்டீவ் ஸ்மித் துணைக் கப்டனாக தொடர்கிறார்.

2018 இல் ஆஸ்திரேலிய டெஸ்ட் அணியின் 46 ஆவது கப்டனாக டிம் பெய்ன் நியமிக்கப்பட்டார். 2019 ஆஸ் தொடரில் அவரது தலைமையில் ஆஸ்திரேலிய அணி கிண்ணத்தைத் தக்கவைத்துக்கொண்டது.

2017 ஆம் ஆண்டு நடந்த தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் போட்டியின்போது பந்தை சேதப்படுத்திய காரணத்திற்காக அப்போதைய ஆஸ்திரேலிய டெஸ்ட் கப்டன் ஸ்டீவ் ஸ்மித்தின் பதவி பறிக்கப்பட்டு டிம் பெய்னிடம் வழங்கப்பட்டது. அப்போதுமுதல் ஆஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கப்டனாகவும் விக்கெட் காப்பாளராகவும் டிம் பெய்ன் செயல்பட்டுவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட்

# யாழ்.மத்திய கல்லூரி அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்

இலங்கைப் பாடசாலை 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையிலான டிவிசன் 3 போட்டித்தொடரின், எந்தேரமுல்ல சென். ஜோசப் கல்லூரி அணிக்கு எதிரான போட்டியில், 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற யாழ்.மத்திய கல்லூரி அணி அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கொழும்பு கோட்டை ஆனந்த சாஸ்திராலயா மைதானத்தில் நடைபெற்ற இந்த போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென். ஜோசப் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கு தீர்மானித்தது.

அதன்படி களமிறங்கிய சென். ஜோசப்கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 38 ஓவர்கள் வரை தாக்குப்பிடிக்க முடியாமல் 27.4 ஓவர்களிலேயே, 61 ஓட்டங்களை மாத்திரம் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. யாழ். மத்திய கல்லூரி அணிசார்பாக, அஜய் மற்றும் வியாஸ்காந்த் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்த இந்துஜன், கவிதர்ஷன் மற்றும் கௌதம் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

அடுத்துத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணி விக்கெட் எதனையும் இழக்காது வெற்றியிலக்கையடைந்து, 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில், சாரங்கன் 31 ஓட்டங்களையும், விதுஷன் 17 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.






## புதிய வகை கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்

# தென்னாபிரிக்க கிரிக்கெட் தொடர்களுக்கு சிக்கல்

தென்னாபிரிக்காவில் புதிய வகை கொரோனா வைரஸ் கண்டறியப் பட்டுள்ளதாகவும், இது அதிக வீரியத்துடன் வேகமாக பரவும் தன்மை கொண்டது என்றும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இங்கிலாந்து, ஜேர்மனி, இத்தாலி, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகள் அங்கு செல்வதற்கு கடும் பயணக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளன.

புதிய வகை வைரஸ் அச்சுறுத்தல் எதிரொலியாக தென்னாபிரிக்காவில் விளையாட்டுப் போட்டிகளும் வெகுவாக பாதிக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. தென்னாபிரிக்காவில் முதலாவது ஒரு நாள் போட்டியில் நேற்று விளையாடிய நெதர்லாந்து கிரிக்கெட் அணி எஞ்சிய இரு போட்டிகளையும் ரத்துச் செய்து விட்டு தாயகம் திரும்ப உத்தேசித்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டெஸ்ட், 3 ஒரு நாள் மற்றும் நான்கு ரி-20 போட்டிகளில் விளையாடத் திட்டமிட்டுள்ளது. வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இந்திய அணி அங்கு செல்லுமா? என்ற சந்தேகம் தற்போது ஏற்பட்டுள்ளது.

இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரி ஒருவர் கூறுகையில், 'அங்குள்ள அடிப்படைச் சூழ்நிலை என்ன என்பது பற்றிய தெளிவான விவரங்களை தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையிடம் கேட்டுள்ளோம். அது கிடைக்காதவரை அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து எதுவும் சொல்ல முடியாது. தற்போதைய திட்டத்தின்படி இந்திய அணி நியூசிலாந்து தொடர் முடிந்து டிசெம்பர் 8 அல்லது 9 ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு புறப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டார்.

# அறிமுக டெஸ்ட் போட்டியில் சதம் அடித்த 16 ஆவது இந்திய வீரராக ஸ்ரேயாஸ் ஐயர்

இந்திய நியூசிலாந்து அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட ஸ்ரேயாஸ் ஐயர், முதல் போட்டியிலேயே சதம் அடித்து சாதனை படைத்தார். அறிமுக டெஸ்டில் சதம் அடித்த 16 ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் படைத்துள்ளார்.

அறிமுகப் போட்டியில் சதம் அடித்த முதல் இந்தியர் லாலா அமர்நாத் ஆவார். இந்தியாவுக்காக அறிமுக டெஸ்டில் சதம் அடித்தவர்கள் பட்டியலில் ஆர்.எச்.ரோதன், கிருபால் சிங், அப்பாஸ் அலி பெய்க், ஹனுமந்த் சிங், குண்டப்பா விஸ்வநாத், சுரீந்தர் அமர்நாத், மொஹமட் அசாருதீன், பிரவின் ஆம்ரே, சவுரவ் கங்குலி, வீரேந்தர் சேவாக், சுரேஷ் ரெய்னா, ஷிகர் தவான், ரோஹித் சர்மா. பிரித்வி ஷா, ஆகியோர் உள்ளனர்.

ஸ்ரேயாஸ் ஐயருக்கு முன், 2018 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக பிரித்வி ா சதம் அடித்தார். அவர் அறிமுகப் போட்டியிலேயே 134 ஓட்டங்களை எடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# ஐ.நா. எப்போதும் இலங்கையுடன் நெருக்கமாகவே செயற்படுகின்றது

## உதவிப் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபை, எப்போதும் இலங்கையுடன் நெருக்கமாகவே செயற்படுகின்றது என, அதன் அரசியல் அலுவல்கள், அமைதியைக் கட்டியெழுப்பல் மற்றும் அமைதிச் செயற்பாடுகள் தொடர்பான உதவிப் பொதுச் செயலாளர் கலீட் கியாரி தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே கலீட் கியாரி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 76 ஆவது கூட்டத்தொடருக்கு இணையாக ஜனாதிபதி மற்றும் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற இருதரப்பு சந்திப்பின் பிரதிபலனாகவே, கலீட் கியாரி இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

அன்டோனியோ குட்ரெஸின் வாழ்த்துகளை ஜனாதிபதிக்கு தெரிவித்த கலீட், ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை தொடர்பான விசேட அவதானத்துடன் நீண்ட காலம் செயற்பட எதிர்பார்க்கிறேன் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி சுற்றாடல் தொடர்பாக காட்டும் ஆர்வம் மற்றும் நோக்கு பற்றித் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்த உதவிப் பொதுச் செயலாளர், அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதில் இலங்கையின் ஆர்வத்தை பாராட்டினார். கடற்படையின் பங்களிப்புடன் கண்டல் தாவரக் கன்றுகள் ஒரு லட்சத்தை நடுவதற்கும் சுற்றாடல் பாதுகாப்பு வேலைத்திட்டங்களின் மூலம் காலநிலை இயற்கை அழிவுகளைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறேன் எனவும் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.

கொரோனாத் தொற்றுக்காலத்தில், தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை சிறப்பாக செய்வதற்கும் ஏனைய சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் கொவெக்ஸ் வசதிகள் ஊடாக இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்கு ஜனாதிபதி தமது நன்றியைத் தெரிவித்தார். 2009ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவு பெற்றதன் பின்னர், வடக்கு, கிழக்கு மாகாணங் களில் அரசாங்கம் நடைமுறைப்படுத்திய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் மூலம் அப்பிரதேசங்கள் துரித வளர்ச்சி கண்டன எனவும், ஜனாதிபதி இதன் போது சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு வருகை தருகின்ற அனைத்து இனமக்களுடனும் ஒன்றிணைந்துச்செயற்படும் நோக்கத்தில், ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத் தொடரில் கலந்துகொண்ட சந்தர்ப்பத்தில் தாம் டயஸ்போராவுக்கு விடுத்த அழைப்பையும் ஜனாதிபதி நினைவுகூர்ந்தார். அதுபற்றி நல்லெண்ணத்துடன் செயற்படுவார்களென்று எதிர்பார்க்கிறேன் எனவும் ஜனாதிபதி இங்கு மேலும் குறிப்பிட்டார்.

இனங்களுக்கு இடையில் ஒற்றுமை மற்றும் உறவுகள் தொடர்பாக இரு தரப்பினரும் தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் ஒன்று இலங்கையில் காணப்படுகின்றது.

நீதி அமைச்சர் ஒரு முஸ்லிமாக இருக்கிறார் என்றும் நீதியரசர் ஒரு தமிழராக இருக்கிறார் எனவும், மேலும் பல்வேறு விசேட பதவிகளை வகிப்போர் ஏனைய இனங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இனங்களுக்கிடையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் பாரிய நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதாகவும் அது தொடர்பாக எவ்வித சந்தேகமும் கொள்ளவேண்டாம் என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

இனங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு கல்வி அடிப்படையாக அமையும் என்பது இரு தரப்பினரதும் கருத்தாகும்.

தென்னாபிரிக்கா, இனவாதச் செயற்பாடுகளை ஒழித்துக்கட்டி முன்னோக்கிச் செல்வதற்காக பின்பற்றிய செயற்பாடுகளை ஆய்வு செய்து, அது தொடர்பாக கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்களின் மூலம் செயற்படுத்த முடியுமான விடயங்கள் பற்றி ஆய்வு செய்து வருகிறேன் எனவும் அதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் – ஹம்டி, ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் மற்றும் அமைதி நடவடிக்கைகள் துறையின் அரசியல் அதிகாரி ஷியாக்கி ஓடா, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர மற்றும் ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# நாட்டுக்கு வரும் இலங்கை அகதிகள் பூர்வீக இடங்களில் வாழ்வதற்கு வழி

## ஏற்படுத்தி தருவேன் என்கிறார் டக்ளஸ்



இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை நாட்டுக்கு அழைத்து வருதல் மற்றும் இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரம் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைள் தொடர்பில், சென்னையில் அமைந்துள்ள இலங்கை உயர் தூதரகத்துக்காக பிரதி உயர்ஸ்தானிகர் டி. வெங்கடேஸ்வரன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து விளக்கமளித்துள்ளார்.

மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் நேற்று(வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற விசேட சந்திப்பிலேயே இந்த விடயங்கள் கலந்துரையாடப் பட்டுள்ளன. குறிப்பாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக இடம்பெயர்ந்து சென்று இந்தியாவில் தங்கியிருக்கின்றவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக பிரதி உயர்ஸ்தானிகரால் கடற்றொழில் அமைச்சருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து அழைத்து வரப்படவுள்ள இலங்கையர்களுக்கு பயண ஏற்பாடுகளை இலவசமாக வழங்குவதற்கும் பொருள்களை ஏற்றிவருவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என தெரிவித்த பிரதி உயர் ஸ்தானி கர், அழைத்து வரப்படு கின்றவர்களின் செலவுகளுக் காக ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் முதல் கட்டமாக தலா 30 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண் டுள்ளதாகவும், அடுத்த வருடம் சுமார் 7 ஆயிடை குடும்பங்களை அழைத்து வருவதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித் தார்.

மேலும், அழைத்து வரப்படுகின்றவர்களின் பூர்வீகப் பிரதேசங்களில் சர்வதேச தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் தெரிவித் தார்.

குறித்த முயற்சிகளை வரவேற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாட்டுக்கு வருவதற்கு விரும்புகின்ற இலங்கையர்கள், தங்களுடைய பூர்வீக இடங்களில் மீள்குடியேறி இயல்பு வாழ்க்கையைத் தொடர்வதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன் எனத் தெரிவித்தமையுடன் குறித்த விடயத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் பூரணமான ஒத்துழைப்பு தனக்கு கிடைக்கும் எனவும் தெரிவித் தார்.

மேலும், பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவின் சிறப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்க பட்டிருக்கின்றவர்கள் தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த மாதம் முல்லைத்தீவுக்கு விஜயம் மேற்கொண்டபோது சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் ஒரு பகுதியினரின் உறவினர்கள் தன்னை சந்தித்தமையை சுட்டிக்காட்டியதுடன், அதுதொடர்பாக ஏற்கனவே இந்திய அதிகாரிகளுடன் கலந்துரையாடியுள்ளமையையும் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, இந்தியக் கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறைகள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், சட்டவிரோத தொழில் முறையால் ஏற்பட்டு வருகின்ற பாதிப்புக்கள் தொடர்பாகவும் மாற்றுத் தொழில்முறைகளைத் தெரிவு செய்ய வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பது தொடர்பாக ஆராயுமாறும் பிரதி உயர் ஸ்தானிகர் டி. வெங்கடேஸ்வரனிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சங்கிலியன் பூங்காவில் மலர் முற்றம் நாளை வரை நீடிக்கப்பட்டது

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு நல்லூர் சங்கிலியன் பூங்காவில் கார்த்திகை வாசம் என்ற பெயரில் மலர்ச்செடிகள் மற்றும் மரக்கன்றுகளைக் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் மலர் முற்றம் ஒன்றைக் கடந்த சனிக்கிழமை (20.11.2021) திறந்து வைத்திருந்தது.

இம்மலர் முற்றம் 26ஆம் திகதிவரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மலர் முற்றத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தாவர உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திகளைக் காட்சிப்படுத்தியிருப்பதோடு விற்பனையும் செய்து வருகின்றனர். கொட்டும் மழையின் மத்தியிலும் அதிகளவிலானோர் வந்து பார்வையிட்டுச் செல்லும் இம்மலர் முற்றத்தில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பாடசாலை மாணவர்களுக்கும் பொது அமைப்புகளுக்கும் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மருத்துவக் கருத்தமர்வு

வடக்கு மாகாண கல்வியமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சூம் செயலி ஊடான 'யாவர்க்கும் நலம்' எனும் கருத்தமர்வானது பிரதி சனிக்கிழமைதோறும் மாலை 7 மணி முதல் 9 மணி வரை நடைபெறுகிறது.

இன்று 'பாலியல் ஆரோக்கியமும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளும்' என்னும் தலைப்பில் பிரபல வைத்திய நிபுணர்களால் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது.

Meeting ID 89985282023
Passcode - 354485

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.11.2021இல் வெளியிடப்பெற்றது.